# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2029/29 - 2017 ජූලි මස 26 වැනි බදාදා - 2017.07.26

*2029/29 ஆம் இலக்கம் - 2017 ஆம் ஆண்டு யூலை மாதம் 26 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி IV(அ) - மாகாண சபைகள்

### *மாகாண சபை அறிவித்தல்கள்*

**மேல் மாகாண மாகாண சபை**

*1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, மாகாண சபைகள் (விளைவாந்தன்மையான ஏற்பாடுகள்) சட்டத்தின் 02 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 252 ஆம் அத்தியாயமான மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 268 ஆம் பிரிவின்கீழ் செய்யப்படுகின்ற அறிவித்தல்*

*252 ஆம் அத்தியாயமான மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 272(32) ஆம் உப பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய கொழும்பு மாநகர சபையினால் தயாரிக்கப்பட்டு, 1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, மாகாண சபைகள் (விளைவாந்தன்மையான ஏற்பாடுகள்) சட்டத்தின் 02 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 252 ஆம் அத்தியாயமான மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 268 ஆம் பிரிவின்கீழ் மேல் மாகாணத்தின் முதலாமைச்சர் மற்றும் உள்ளூராட்சி விடயங்களுக்குப் பொறுப்பான அமைச்சர் என்ற வகையில் என்னால் அங்கீகரிக்கப்பட்டுள்ள கொழும்பு மாநகர சபையின் கொழும்பு மாநகர சபை அதிகார எல்லைக்குள் வாகனங்கள் தரித்து வைத்தல் தொடர்பான இங்கு கீழே உப அட்டவணையில் குறிப்பிடப்படும் துணைவிதி, 1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, மாகாண சபைகள் (விளைவாந்தன்மையான ஏற்பாடுகள்) சட்டத்தின் 02 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 252 ஆம் அத்தியாயமான மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 268 ஆம் பிரிவில் மேலும் குறிப்பிடப்படும் ஏற்பாடுகளுக்கமைய 2017, யூன் மாதம் 06 ஆந் திகதி மேல் மாகாண சபையினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது என்பதை இத்தால் அறியத்தருகின்றேன்.*

இசுர தேவப்பிரிய,
மேல் மாகாணத்தின் முதலமைச்சர் மற்றும் நிதி,
திட்டமிடல், பொறியியல் சேவைகள், சட்டம்
மற்றும் சமாதானம், உள்ளூராட்சி மற்றும்
மாகாண நிருவாகம், பொருளாதார அபிவிருத்தி,
மின்வலு மற்றும் எரிசக்தி, சுற்றாடல் விவகாரம்,
நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு மற்றும்
சுற்றுலா விவகாரங்கள் பற்றிய அமைச்சர்.

மேல் மாகாணத்தின் முதலமைச்சர் அலுவலகம்,
சிராவஸ்தி இல்லம்,
கொழும்பு 07,
2017, யூலை 19.


1A - PG 3625 — 11 (2017/07)

*இவ் அதி விசேட வர்த்தமானியை www.documents.gov.lk என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**வாகனங்களைத் தரித்து வைத்தல்**

1. இந்த துணைவிதி "வாகனங்களைத் தரித்து வைத்தல் தொடர்பான துணைவிதி" என அழைக்கப்படும்.

2. கொழும்பு மாநகர எல்லையுள் வாகனங்களை நிறுத்துதல், நிறுத்தலைத் தடைசெய்தல், தரித்தலுக்கான இடங்களை ஏற்படுத்தல் மற்றும் விதிமுறைக்குட்படுத்தல், கட்டணம் அறவிடல், மீறுவோரைக் கவனித்து ஆவண செய்தல் போன்றவற்றிற்கு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காகக் கொண்டுவரப்படும் துணைவிதியாகும்.

3. சொற்கள் தொடர்பாக வேறு அர்த்தம் தேவையான பட்சத்தில் அல்லாது இந்த துணை விதி கூற்றுக்களில் "மாநகர ஆணையாளர்" என்பது, கொழும்பு மாநகர சபையின் மாநகர ஆணையாளரைக் குறிக்கும்.

"வாகனம்", "மோட்டார் வாகனம்", முச்சக்கர வண்டி, ஈர்வழிச் செயற்பாட்டு வண்டி, மோட்டார் லொறி, இலகு மோட்டார் லொறி, கனரக மோட்டார் லொறி என்பவற்றிற்கு, மோட்டார் வாகன சட்டமூலம் மற்றும் அதன் திருத்தச் சட்டமூலங்களின் மூலம் முன்வைக்கப்பட்ட அர்த்தங்களே கருதப்படும்.

"மோட்டார் சைக்கிள், மோட்டார் வண்டி, பேரூந்து வண்டி, மோட்டார் கோச் வாகனம்" என்பவற்றிற்கு, 1991 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்கம் கொண்ட மேல் மாகாண மோட்டார் வாகன சட்டவாக்கம் மற்றும் அதன் திருத்தச் சட்டமூலங்களின் மூலம் முன்வைக்கப்பட்ட அர்த்தங்களே கருதப்படும்.

"தரித்து வைத்தல்" என்பது, வாகனமொன்றை இயக்கமற்ற நிலைக்குக் கொண்டுவருதலாகும். மேலும் நபர்களை அல்லது பொருட்களை உடன் ஏற்றிக்கொள்ளுதல் அல்லது இறக்கிக்கொள்ளுதல் அல்லாது, வேறு விடயங்களுக்காக அதனைத் தரித்து நிற்கச் செய்தல் எனக் கருதப்படும்.

"பாடசாலை வேன் வண்டி" என்பது, பாடசாலைப் பிள்ளைகள் பயணிக்கின்ற 5 ஆசனத்திற்குக்கூடிய 15 ஆசனத்திற்குக் குறைவான மோட்டார் வாகனம் என்பதாகும்.

"பாடசாலை பேரூந்து வண்டி" என்பது, பாடசாலைப் பிள்ளைகள் பயணிக்கின்ற 14 ஆசனத்திற்குக்கூடிய மோட்டார் வாகனம் என்பதாகும்.

"பரிபாலிப்பவர்" என்பதன் கருத்து வாகனங்களைப் பொது தரிப்பிடப் பகுதியொன்றில் மாநகர ஆணையாளருக்குப் பதிலாக உத்தரவுப்பத்திரங்கள் வழங்குவதற்கு, அந்த ஆணையாளரினால் அதிகாரம் வழங்கப்பட்டுள்ள நபர் என்பதாகும்.

"வீதி சமிக்ஞை" என்பவற்றிற்கு மோட்டார் வாகன சட்டமூலம் (203 ஆம் அத்தியாயம்) மற்றும் அதன் திருத்தச் சட்டமூலங்களின் மூலம் முன்வைக்கப்பட்ட அர்த்தங்களே கருதப்படும்.

"வீதி" என்பதன் மூலம், கொழும்பு மாநகர சபை எல்லையுள் அமைந்துள்ள மாநகர சபைக்குச் சொந்தமான அல்லது மாநகர சபையினால் பரிபாலிக்கப்படும் வீதி, நெடுஞ்சாலை, பாதை, வழி, ஒழுங்கை, வீதி நுழைவுகள் எனக் கருதப்படும்.

"உரிமையாளர்" என்பது, மோட்டார் வாகனத் திணைக்களத்தினால் "உரிமையாளர்" எனப் பதிவு செய்யப்பட்டுள்ள நபரைக் குறிக்கும்.

"சபை" அல்லது "மாநகர சபை" என்பது, கொழும்பு மாநகர சபையைக் குறிக்கும்.

**தடைசெய்தல்**

4. (i) சபையின் நிர்வாக எல்லையுள், குறிப்பிட்ட வீதி ஒன்றில் அல்லது வீதியின் பகுதியொன்றில், வாகனம் தரித்தல் அல்லது தரித்தல் தடை செய்தல், கட்டுப்படுத்தல், நிர்வகித்தல் அல்லது வாகனங்கள் தரிப்பிடமொன்றைக் குறிப்பிடும் அறிவித்தல்களை, ஆணையாளரின் உத்தரவின்படி அவ்வீதியில், வீதியின் ஒரு பகுதியில் பிரதான நிலையமொன்றில், அல்லது வீதியின் ஒரு பகுதியில் தெரியத்தக்கதாகக் காட்சிப்படுத்தப்படல் வேண்டும்.

(ii) வீதிகளில் வாகனங்கள் தரித்துவைக்கும் இடங்களை அமைத்தல், நடவடிக்கை பொறியியல் விதிமுறைகளின்படியும், செலவுகளுக்கேற்பவும் வீதிகளில் அடையாளங்கள் இடப்பட்டு, கொழும்பு மாநகர சபையின் பொறியியல் செயற்பிரிவின் மூலம் மேற்கொள்ளப்படும்.

5. 4 ஆம் இடைக்கால யாப்பின்கீழ் காட்சிப்படுத்தப்பட்ட அறிவித்தல்களின் மூலம் குறிப்பிட்ட வீதியொன்றில் அல்லது வீதியின் ஒரு பகுதியில் வாகனங்கள் தரித்தல் அல்லது வாகனங்களைத் தரித்து வைத்தல் அல்லது தடை உத்தரவு காணப்படுமிடத்து வாகன சாரதிகள்–

(i) சபையின் உத்தரவுபெற்ற அதிகாரியொருவரால் அல்லது அதிகாரம் பெற்றவரொருவரால் குறிப்பிட்ட வீதியில் அமைக்கப்பட்ட அல்லது காட்சிப்படுத்தப்பட்டுள்ள குறிப்பிடப்பட்ட வாகன சமிக்ஞைக்கு அல்லது அறிவித்தலுக்கு ஏற்ப செயற்படல் ;

(ii) அந்த வீதியில் அல்லது வீதியின் ஒரு பகுதியில் அச்சந்தர்ப்பத்தில் காணப்படும் குறிப்பிட்ட வாகனப் போக்குவரத்து முறையைச் சரியாகப் பின்பற்றல் :

எவ்வாறாயினும்,

(i) குறிப்பிட்ட வெளி நபர் ஒருவருக்கு அவ்வாகனத்திலிருந்து இறங்குவதற்கு அல்லது வாகனத்தில் ஏறுவதற்கு இடமளித்தல் ;

(ii) அவ்வாகனத்திற்குப் பொருட்களை ஏற்றுதல், பொருட்களை இறக்குதல் போன்ற நடவடிக்கைகளுக்காக 5 நிமிட நேர உச்ச கால அளவைத் தவிர, அவ்வாகனத்தைக் குறிப்பிட்ட வீதியில் அல்லது வீதியின் ஒரு பகுதியில் தரித்து வைத்தல் அல்லது தரித்து வைப்பதற்கு வசதியளித்தல் கூடாது.

*6.* இந்த துணைவிதியின்கீழ் குற்றமொன்றிற்காகக் குறிப்பிட்ட வழக்குத் தொடருதல் நடவடிக்கைக்காக 5 ஆவது துணைவிதியின்படி அல்லது ஆணையாளரின் நியதிப்படி அல்லது காட்சிப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதும், சபையின் நிர்வாகப் பிரிவு எல்லையுள் காணப்படும் அனைத்து அறிவித்தல்களும் அவற்றிற்கு எதிரான விடயங்கள் நிரூபிக்கப்பட்டால் ஒழிய அவை ஆணையாளரினால், சட்டப்படி காட்சிப்படுத்தப்பட்டுள்ளவையாகவே கருதப்படல் வேண்டும்.

**மோட்டார் வாகனங்களைத் தரித்து வைத்தல்**

*7.* மோட்டார் வாகனங்களைத் தரித்து வைப்பதற்காகக் கட்டணமொன்றை அறவிட்டு மோட்டார் வாகனம் அல்லது குறிப்பிட்ட வகுப்பைச் சேர்ந்த அல்லது வகையைச் சேர்ந்த மோட்டார் வாகனங்களைத் தரித்து வைப்பதற்காக ஒதுக்கப்பட்ட இடம், இங்கு இந்த துணைவிதியில் "வாகனங்களைத் தரித்து வைக்கும் பொது இடம்" எனக் குறிப்பிடப்படுவதுடன் இதற்காக ஆணையாளர் நகர எல்லையுள் பொது இடமொன்றை ஒதுக்க முடியும்.

*8.* குறிப்பிட்ட நபரொருவர் வாகனத்தைத் தரித்து வைக்கவேண்டிய தேவைக்காக அல்லது வேறு கடமை நிமித்தத்தைத் தவிர, வாகனங்களைத் தரித்து வைக்கும் பொது இடமொன்றினுள் பிரவேசித்தல் அல்லது மோட்டார் வாகனம் தவிர்ந்த வேறு வாகனமொன்றை அங்கு தரித்து வைத்தல் அல்லது தரித்து வைப்பதற்கு இடமளித்தல் கூடாது.

*9.* மோட்டார் வாகனமொன்றைத் தரித்து வைக்கும் பொது இடமொன்றினுள் செலுத்துதல் அல்லது அங்கு தரித்து வைத்தலுக்கு நகர சபையின் உத்தரவுபெற்ற பிரதிநிதி உத்தியோகத்தரினால் வழங்கப்படும் பற்றுச்சீட்டு அல்லது குறிப்பிட்ட கட்டணத்தைச் செலுத்திப் பெறப்பட்ட செல்லுபடியான உத்தரவுப்பத்திரம் அதன் சாரதியிடம் இருந்தாலொழிய அந்தச் சாரதிக்கு அவ்விடத்தில் வாகனத்தைத் தரிப்பதற்கு அல்லது தரித்து வைப்பதற்கு இடமளித்தல் கூடாது.

*10.* இந்த துணைவிதியினால் உள்ளடங்கப்படாத பயணிகள் போக்குவரத்துக்காக ஈடுபடுத்தப்பட்டுள்ள கூலி முச்சக்கர வண்டிகளுக்காகப் பயணிகளை ஏற்றுதல், இறக்குதல் சம்பந்தமாக நிறுத்தும் இடம் ஸ்தாபித்தல் தொடர்பான ஒழுங்குவிதிமுறைகள் கொழும்பு மாநகர சபையினால் தயாரிக்கப்பட வேண்டும்.

*11.* (i) *9* ஆவது துணைவிதியின்கீழ் வெளியிடப்படும் ஒவ்வொரு உத்தரவுப்பத்திரத்திற்கும் அல்லது பற்றுச்சீட்டு அல்லது குறிப்பிட்ட கட்டணத்தைச் செலுத்திப் பெறப்பட்ட செல்லுபடியான அனுமதிக்கும், மாநகர சபையினால் பிரேரணை நிறைவேற்றல் மூலம், தீர்மானம் பெறப்பட்டு வர்த்தமான அறிவித்தலில் வெளியிடப்பட்டு காலத்திற்குக்காலம் மாற்றம் பெற்றதன்படி இங்கு *1* ஆம் உப பதிவேட்டில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு தொகையொன்று கட்டணமாக அறவிடப்படல் வேண்டும்.

(ii) *9* ஆம் துணைவிதியின்கீழ் வெளியிடப்படும் அனைத்து உத்தரவுப்பத்திரத்திலும் அல்லது பற்றுச்சீட்டிலும் அல்லது குறிப்பிட்ட கட்டணத்தைச் செலுத்திப் பெறப்பட்ட உத்தரவுப்பத்திரத்திலும் அது வெளியிடப்பட்டது. குறிப்பிட்ட மோட்டார் வாகனம் தொடர்பாகவெனில் இந்த மோட்டார் வாகனத்தைக் குறிக்கும் அடையாள இலக்கம் குறிப்பிடப்படல் வேண்டும். மேலும், அந்த உத்தரவுப்பத்திரத்தில் அல்லது பற்றுச்சீட்டில் அல்லது கட்டணம் செலுத்திப் பெறப்பட்ட உத்தரவில் குறிப்பிட்டுள்ள கால எல்லையில் செல்லுபடியாதல் வேண்டும்.

(iii) *9* ஆம் துணைவிதியில் குறிப்பிட்டவாறு வாகனத்தைத் தரித்து வைக்கும் காலத்திற்கான முழுத்தொகையையும் செலுத்தி உத்தரவுப்பத்திரம் அல்லது பற்றுச்சீட்டு வழங்கப்பட்டுள்ள சந்தர்ப்பத்தில் அந்த உத்தரவுப்பத்திரத்தை வாகனத்தின் முன்பக்க கண்ணாடி ஊடாக தெளிவாகத் தெரியத்தக்கதாக காட்சிப்படுத்தப்படல் வேண்டும்.

(iv) மேற்படி 11 (iii) இன் பிரகாரம் அவ்வாறு உத்தரவுப்பத்திரத்தை காட்சிப்படுத்தாமை, கட்டணம் செலுத்தாது தரித்து வைத்தல் அல்லது உத்தரவுபெற்றுள்ள கால எல்லையைவிட அதிக நேரம் தரித்து வைத்தல் போன்றன சட்டத்திற்கு முரண்பாடானவை. மேலும் இதுபோன்ற சந்தர்ப்பமொன்றில் இங்கு II ஆம் உப பதிவேட்டில் குறிப்பிட்டவாறு தாமதக் கட்டணமொன்றைச் செலுத்த வேண்டும்.

(v) மேற்குறிப்பிட்டவாறு சட்டத்திற்கு முரணாக வாகனத்தைத் தரித்தல் தொடர்பாக சாரதியிடம் கட்டணம் அறவிடப்படும். அவ்வாறு செலுத்தாவிட்டால் அந்த உரிமையாளருக்கு எதிராகப் பின்வருமாறு வழக்குத் தொடரப்படும்.

(vi) முறையாகப் பணம் செலுத்தாத தரித்து வைக்கப்பட்ட வாகனத்தை அடையாளம் கண்டபின் சாரதிக்கு அல்லது உரிமையாளருக்கு சபை அல்லது சபையினால் உத்தரவைப் பெற்ற நிறுவனத்தின் மூலம் வழங்கப்படும் அறிவித்தலுக்கு ஏற்ப சாரதி அல்லது உரிமையாளர் தாமதக் கட்டணத்தைச் செலுத்துவதற்கு உள்ளாக்கப்படுவர்.

(vii) இந்த தாமதக் கட்டணம் வர்த்தமானியில் பிரசுரிக்கப்படும் உச்ச நிதி வரையறையைத் தாண்டிய உடன் அந்த தாமதக் கட்டணம் அறிவித்தல் வழங்கிய தினம் அல்லது அதில் இருந்து 03 மாதங்கள் ஆகிய இரண்டில் முதலாவது வரும் சந்தர்ப்பத்தில் குறித்த பணம் அறவிட்டுக்கொள்வதற்காக உரிய நீதிமன்றத்தில் வழக்குத் தொடர முடியும்.

12. மேற்படி 11 (iv) துணைவிதியில் குறிப்பிடப்பட்டவாறு சட்டத்திற்கு முரணாக தரித்து வைக்கப்பட்டு செலுத்தவேண்டிய தாமதக் கட்டணத்தை மூன்று சந்தர்ப்பங்களில் அல்லது அதற்கு மேலான சந்தர்ப்பங்களில் செலுத்தாது அலட்சியம் செய்த சந்தர்ப்பத்தில்,

மேற்படி 11 (iv) துணைவிதியில் குறிப்பிடப்பட்டவாறு சட்டத்திற்கு முரணாக மூன்று தினங்களுக்கு அல்லது அதற்கும் அதிகமான காலம் வாகனங்களைத் தரித்து வைக்கும் இடமொன்றில் வாகனத்தைத் தரித்து வைத்திருக்கும் சந்தர்ப்பத்தில்,

சில்லுகளைப் பூட்டிடல் (Tyre Lock) நடவடிக்கை கொழும்பு மாநகர சபையின் மூலம் அல்லது சபையின் உத்தரவுபெற்ற பிரதிநிதி ஒருவர் மூலம் மேற்கொள்ளப்படும். இவ்வாறு செய்வதற்காகக் குறிப்பிட்ட வாகன சாரதியிடம் அல்லது உரிமையாளரிடம் உத்தரவுபெறத் தேவையில்லை. இதனை மேற்கொள்ளும்போது வாகனத்திற்கு அல்லது அதன் ஒரு பகுதிக்கு ஏதாவது சேதம் ஏற்பட்டால் இது தொடர்பாக மாநகர சபை அல்லது உத்தரவுபெற்ற பிரதிநிதி எந்தவொரு வகை கூறலுக்கும் உட்பட வேண்டியதில்லை. சில்லுகள் பூட்டிடப்பட்ட சந்தர்ப்பத்தில் குறிப்பிட்ட சாரதி அல்லது வாகன உரிமையாளர், செலுத்தவேண்டிய அனைத்துத் தாமதக் கட்டணங்களையும் அனைத்து சேவைக் கட்டணங்களையும் செலுத்தியதன் பின்னர் மட்டுமே வாகனத்தை விடுவித்தல் வேண்டும். அவ்வாறு தாமதக் கட்டணம், சேவைக்கட்டணம் என்பவற்றைச் செலுத்தி வாகனம் மீட்கப்படாத சந்தர்ப்பத்தில் பாதை இடைஞ்சலகள் ஏற்படுமாகையால் அதனை அவ்விடத்திலிருந்து அகற்றி வேறொரு இடத்திற்குக் கொண்டுசெல்லல் அல்லது தற்காலிகமாக வாகனங்களைச் சேர்த்து வைக்கும் பிரிவிற்கு மாற்றம் மேற்கொள்ளப்படும். இவ்வாறான சந்தர்ப்பமொன்றில் வாகனத்திற்கு அல்லது அதன் பகுதியொன்றிற்கு ஏற்படும் சேதம் தொடர்பாக சபை அல்லது உத்தரவுபெற்ற பிரதிநிதி எவ்வித வகைகூறலுக்கும் உட்படவேண்டியதில்லை.

13. பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் அல்லது வாகன கட்டுப்பாட்டாளர் ஒருவர் அல்லது அவ்விடயங்களுக்காக ஆணையாளரினால் அதிகாரம் வழங்கப்பட்டுள்ள ஒரு நபர், வாகனங்களைத் தரித்து வைக்கும் பொது இடமொன்றில் தரித்து வைக்கப்பட்டுள்ள குறிப்பிட்ட வாகனம் ஒன்றின் உரிமையாளரிடம் அல்லது சாரதியிடம் அந்த மோட்டார் வாகனம் தொடர்பாக வழங்கப்பட்டுள்ள உத்தரவுப்பத்திரத்தைப் பரீட்சிப்பதற்காகத் தருமாறு கேட்டுக்கொள்ளும் எச்சந்தர்ப்பத்திலும் அந்த உத்தரவுப்பத்திரத்தைக் குறிப்பிட்ட உரிமையாளர் அல்லது சாரதி முன்வைத்தல் வேண்டும்.

14. வாகனங்களைத் தரித்து வைக்கும் பொது இடமொன்றில் ஒரு பகுதி, குறிப்பிட்ட நிச்சயிக்கப்பட்ட வகுப்பு அல்லது வகை, மோட்டார் வாகனங்களுக்காக ஒதுக்கப்பட்டு காணப்படுமிடத்து அவ்விடத்திற்குப் பிரவேசித்தல் அல்லது அவ்வகுப்பை அல்லது வகையைச் சாராத மோட்டார் வாகனமொன்றை அங்கு தரித்து வைத்தல் இடம்பெறக் கூடாது.

15. வாகனங்களைத் தரித்து வைக்கும் பொது இடமொன்றிற்கு வரும் அல்லது அதிலிருந்து வெளியாகும் வேறொரு மோட்டார் வாகனமொன்றிற்கு இடைஞ்சல் ஏற்படுமாறு எந்தவொரு நபரும் வாகனங்களைத் தரித்து வைக்கும் பொது இடமொன்றில் மோட்டார் வாகனங்களை நிறுத்தி வைத்தல் கூடாது.

16. பொதுத் தரிப்பிடம் ஒன்றில் உட்செல்லல், வெளியேறல் என்பவற்றிற்காக வழிகள் ஒதுக்கப்பட்டு இதற்கான அறிவித்தல்கள் அல்லது சமிக்ஞைகள் மூலம் காட்டப்பட்டிருக்கும் சந்தர்ப்பங்களில் குறிப்பிட்ட பாதையை விடுத்து, வேறொன்றில் எந்தவொரு மோட்டார் வாகனத்தையும் அத்தரிப்பிடத்தில் செலுத்துதல் அல்லது அதிலிருந்து வெளியேற்றல் கூடாது.

17. வாகனங்களைத் தரித்து வைக்கும் பொது இடமொன்றில், வாகனம் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கும்போது குறிப்பிட்ட நபர் அதனைக் கழுவுதல் அல்லது கழுவுவதற்கு இடமளித்தல் கூடாது.

18. வாகனங்களைத் தரித்து வைக்கும் பொது இடமொன்றில், வாகனம் தரித்து வைக்கப்பட்டிருக்கும் வேளை, மாநகர ஆணையாளரின் விசேட அனுமதியின்றி வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபடல் அறிவித்தல்களைக் காட்சிப்படுத்தல், ஒலிப்பெருக்கி இயந்திரப் பயன்பாடு அல்லது வர்த்தக நோக்கத்திற்காக ஒலிபெருக்கியைப் பயன்படுத்தல் என்பன கூடாது.

19. எந்தவொரு நபரினாலும்,

(i) வாகனத்தைத் தரித்து வைக்கும் பொது இடமொன்றிலிருந்து வாகனத்தை வெளியேற்றுவதற்காகப் பழுதுபார்த்தல் அவசியமெனின் தவிர, வாகனங்களைத் தரித்து வைக்கும் பொது இடமொன்றில் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கும் குறிப்பிட்ட மோட்டார் வாகனமொன்றில் ஏதாவது பழுதுபார்த்தல் மேற்கொள்ளப்படக் கூடாது ;

(ii) இவ்வாறான பழுதுபார்த்தல் மேற்கொள்ளும்போது சந்தர்ப்பத்திற்கேற்ப அவசியமானதைத் தவிர அசாதாரணமான ஏதாவது ஒலி எழுப்புதல் கூடாது. அத்தியாவசிய தன்மையைத் தீர்மானிப்பவர், சந்தர்ப்பத்திற்கு ஏற்ப விடயங்களைக் கருத்தில்கொண்டு மாநகர சபை ஆணையாளர் அல்லது உத்தரவுபெற்ற பிரதிநிதியாவார்.

20. பொதுத் தரிப்பிடமொன்றில் தரித்து வைத்திருக்கும் வாகனமொன்றின் சாரதி ஒருவர்–

(i) வாகனம் தரித்திருக்கும் இடத்தை மாற்றுதல் அல்லது தரிப்பிடத்தில் இருந்து வெளியேறல், அத்தியாவசிய தேவையைத் தவிர அதன் இயந்திரத்தை இயக்குதல் அல்லது

(ii) விபத்தொன்றைத் தவிர்ப்பதற்காக அல்லது வாகனத்தின் அல்லது அதனுள் இருப்பவரின் பாதுகாப்பை உறுதிசெய்துகொள்ளல் போன்ற நடவடிக்கைகளுக்காக அல்லது வாகனத்தில் பொருத்தப்பட்டுள்ள அபாய ஒலியை எழுப்பும் உபகரணத்தை ஒலிக்கச் செய்தல் கூடாது.

(iii) எந்தவொரு நபரும் வாகனங்களை தரித்து வைக்கும் பொது இடமொன்றில் பொருத்தமற்ற அநாகரிகமான ஒழுங்கீன முறையில் நடந்துகொள்ளல் அல்லது ஏதாவது இடைஞ்சல் ஏற்படுத்தல் கூடாது.

21. ஆணையாளரினால் வர்த்தமானி அறிவித்தல் மூலம் வெளியிடப்படும் வாசகத்தின் மூலம், வாரத்தில் குறிப்பிட்ட நாளில் இந்த இடைக்கால யாப்பு நடைமுறையாகாது என நிச்சயிக்கப்படலாம், அல்லது இந்த இடைக்கால யாப்பு செல்லுபடியாகும் கால நேரத்தில் மாற்றங்கள் கொண்டு வரப்படலாம்.

22. இந்த துணைவிதியின் ஒழுங்குவிதிமுறைகளை மீறுதல் ஒவ்வொரு நபரும் குற்றத்திற்காக குற்றவாளியாக ஆவதுடன், நீதவான் முன்னிலையில் இடம்பெறும் வழக்கு விசாரணையின் பின் குற்றவாளியாக கருதப்படுமிடத்து,

(அ) முதலாவது குற்றத்திற்காக ரூபா ஓராயிரத்துக்கு மேற்படாத தண்டமொன்றுக்கும் ;

(ஆ) இரண்டாவது அல்லது கடுங்குற்றம் தொடர்பாக ரூபா இரண்டாயிரத்திற்கு மேற்படாத தண்டமொன்றுக்கும் ;

(இ) தொடர்ச்சியாக இடம்பெறும் குற்றச்செயலில் குற்றவாளியாகக் காணப்பட்டு, குற்றவாளி ஈடுபடும் குற்றச் செயல், தடை மீறல்கள் என்பன தொடர்பாக அவதானிக்கப்பட்டு, பின்னர் தொடர்ந்து புரியும் குற்றம் தொடர்பாக நாளொன்றுக்கு ரூபா இருநூற்றி ஐம்பதைவிட மேற்படாத தண்டப்பணத்திற்கும் உட்படுத்தப்படுவர்.
மேலும்,
சேவைக் கட்டணத்தையும் செலுத்த வேண்டும்.

23. இந்த துணைவிதிச் சட்டம் அமுலுக்கு வந்தவுடன் தற்சமயம் கொழும்பு மாநகர சபையினுள் நடைமுறைப்படுத்தப்படுகின்ற வாகனம் தரிக்கும் இடம் சம்பந்தமான 1941 ஆம் ஆண்டு மே மாதம் 16 ஆந் திகதிய 8746 ஆம் இலக்க, அரச வர்த்தமானி மூலமும், 1942 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 27 ஆந் திகதிய 8896 ஆம் இலக்க, அரச வர்த்தமானி மூலமும், 1948 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 10 ஆந் திகதிய 9902 ஆம் இலக்க, அரச வர்த்தமானி மூலமும், 1929 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 15 ஆந் திகதிய 7693 ஆம் இலக்க, அரச வர்த்தமானி மூலமும் மற்றும் 1939 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 22 ஆந் திகதிய 8561 ஆம் இலக்க அரச வர்த்தமானி மூலமும் பகிரங்கப்படுத்தப்பட்ட துணைவிதிச் சட்டங்கள் உட்பட இதுவரை இது சம்பந்தமாக விதிக்கப்பட்டுள்ள சகல துணைவிதிச் சட்டங்களும் இத்தால் செல்லுபடியற்றதாக்கப்படுகின்றது.

24. வாகனம் தரித்து வைத்தல் சம்பந்தமான இந்த துணைவிதிச் சட்டம் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட திகதி தொடக்கம் செல்லுபடியாகும்.

25. இந்தச் சட்டமூலத்தில் சிங்களம் மற்றும் தமிழ் மொழிகளில் உள்ள சொற்பதங்களில் ஏதேனும் பொருந்தாத தன்மை காணப்படும் பட்சத்தில் சிங்கள மொழியில் உள்ள சொற்பதங்கள் ஏற்றுக்கொள்ளப்படல் வேண்டும்.

**அட்டவணை I**

| | வாகனத் தரித்தல் கட்டணம் மணித்தியாலத்திற்கு அல்லது அதன் பகுதியொன்றிற்காக ரூபா | வாகனத் தரித்தல் கட்டணம் மாதமொன்றிற்கு அல்லது அதன் பகுதியொன்றிற்காக ரூபா |
|---|---|---|
| (i) மோட்டார் சைக்கிள் | 10.00 | |
| (ii) முச்சக்கர வண்டி | 20.00 | |
| (iii) மோட்டார் வண்டி அல்லது ஈர்வழிச் செயற்பாட்டு வண்டி | 30.00 | |
| (iv) பஸ் வண்டி, லொறி அல்லது கன்டனர் வண்டி | 50.00 | |
| (v) பாடசாலை வேன் மாதமொன்றிற்கு அல்லது அதன் பகுதியொன்றிற்கு | | 600.00 |
| (vi) பாடசாலை பஸ்வண்டி மாதம் ஒன்றிற்கு அல்லது அதன் பகுதி ஒன்றிற்கு | | 1,000.00 |

**அட்டவணை II**

| | சட்டத்திற்கு முரணாக வீதியொன்றில் தரித்து வைக்கப்பட்டுள்ள வாகனமொன்றிற்கான தாமதக் கட்டணம் | | |
|---|---|---|---|
| | 1 ஆம் நாள் மணித்தியாலயம் ஒன்றிற்கு அல்லது அதன் பகுதி ஒன்றிக்கு (ரூபா) | 2 ஆம் நாள் முதல் 14 ஆம் நாள் வரை நாள் வரை நாள் ஒன்றிற்கு அல்லது ஒன்றிற்கு அல்லது அதன் பகுதி ஒன்றிற்கு (ரூபா) | அதன் பிறகு மாதம் ஒன்றிற்கு அல்லது மாதமொன்றின் பகுதிக்கு (ரூபா) |
| மோட்டார் சைக்கிள் | 20.00 | 360.00 | 5,000 |
| முச்சக்கர வண்டி | 40.00 | 720.00 | 10,000 |
| மோட்டார் கார் மற்றும் ஈர் வழி இயக்கம் கொண்ட கார் | 60.00 | 1080.00 | 15,000 |
| பஸ் வண்டி லொறி அல்லது கன்டேனர் வண்டி | 100.00 | 1800.00 | 25,000 |
| பாடசாலை வேன் வண்டி | 40.00 | 500.00 | 7,000 |
| பாடசாலை பஸ் வண்டி | 60.00 | 850.00 | 12,000 |

துணைவிதி இல. 11 (vii) இன்படி மிகுதிப் பணத்தைப் பெற்றுக் கொள்வதற்காக, மூன்று மாதத்தின் பின்னர் அல்லது தாமதக் கட்டணம் 50,000 ரூபாவைவிட அதிகரித்ததன் பின்னர் வழக்குத் தொடரப்படும்.

8- 368

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.